**செ. கு. எண்:186** **நாள் :12.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.12.2015

சென்னை மாநகராட்சி, மண்டலம் - 6, கோட்டம் - 77ல் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து வந்த, திருவல்லிக்கேணி, ராம் நகரைச் சேர்ந்த திரு.காந்தாராவ் என்பவர் 11.12.2015 அன்று வெள்ளம் பாதித்த புளியந்தோப்பு பகுதியில் துப்புரவு பணியை மேற்கொண்டிருந்த போது மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. காந்தாராவ் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நான்கு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**